Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# தமிழ் மக்கள் குரல்

tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Tamilnadu Association For The Rights of All Types of Differently Abled and Caregivers - TARATDAC
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | திங்கள்கிழமை, ஆகஸ்ட் 12, 2024 | இதழ் 121

# சந்திரயான்-3 திட்டத்தின் வெற்றியைக் கொண்டாடும் வகையில் ஆகஸ்ட் 23 ஆம் தேதியை “தேசிய விண்வெளி தினமாக“ மத்திய அரசு அறிவித்துள்ளது

சென்னை, 12 ஆகஸ்ட் 2024: விக்ரம் லேண்டரின் பாதுகாப்பான மற்றும் மென்மையான தரையிறக்கத்தை நிறைவேற்றி, தென் துருவத்திற்கு அருகில் சந்திரனின் மேற்பரப்பில் பிரக்யான் ரோவரை நிலைநிறுத்திய சந்திரயான்-3-ன் மிகச் சிறந்த வெற்றியைக் கொண்டாடுவதற்காக மத்திய அரசு ஆகஸ்ட் 23-ந் தேதியை "தேசிய விண்வெளி தினமாக" அறிவித்துள்ளது.

இந்த வரலாற்று சாதனை விண்வெளியில் பயணிக்கும் நாடுகளின் ஒரு உயரடுக்கு குழுவில் இந்தியாவை வைத்துள்ளது. இந்தத் தரையிறக்கத்தின் மூலம் சந்திரனில் தரையிறங்கிய நான்காவது நாடாகவும், சந்திரனின் தென் துருவத்தில் தரையிறங்கிய முதல் நாடாகவும் இந்தியா திகழ்கிறது. விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் இளைய தலைமுறையினரை ஈடுபடுத்தி ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இந்தச் சாதனை 2024-ம் ஆண்டு ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது.

மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை அமைச்சர் திரு ராஜீவ் ரஞ்சன் சிங் நாளை காலை 10 மணிக்கு புதுதில்லியில் உள்ள கிருஷி பவனில் தேசிய விண்வெளி தின கொண்டாட்டத்தை முன்னிட்டு நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறார். மீன்வளத்துறை செயலாளர் டாக்டர் அபிலாஷ் லிக்கி மற்றும் பிற பிரமுகர்கள் இதில் கலந்து கொள்கிறார்கள்.

சந்திரயான் -3 விண்கலத்தின் சிறப்பான வெற்றியை நினைவுகூரும் வகையில், டாக்டர் அபிலாஷ் லிக்கியின் வழிகாட்டுதலின் கீழ் கடலோர மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் "மீன்வளத் துறையில் விண்வெளி தொழில்நுட்பங்களின் பயன்பாடு" குறித்த தொடர்ச்சியான கருத்தரங்குகள் மற்றும் செயல்விளக்கங்களை மீன்வளத்துறை ஏற்பாடு செய்து வருகிறது. மீன்வளத்தில் விண்வெளி தொழில்நுட்பம் ஸ்ரீ ஒரு கண்ணோட்டமாகும். கடல்சார் களத்திற்கான தகவல் தொடர்பு மற்றும் வழிகாட்டல் அமைப்பு, விண்வெளி அடிப்படையிலான கண்காணிப்பு மற்றும் மீன்வளத் துறையை மேம்படுத்துவதில் அதன் தாக்கம் போன்ற தலைப்புகளை உள்ளடக்கிய இந்தக் கருத்தரங்குகள் மற்றும் செயல்விளக்கங்கள் 18 இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

விண்வெளித் துறை, இன்காய்ஸ், நியூஸ்பேஸ் இந்தியா லிமிடெட் மற்றும் மீனவர்கள், சாகர் மித்ராக்கள், உவர் வன உற்பத்தியாளர்கள், மீன்வள கூட்டுறவு நிறுவனங்கள், இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில், மீன்வள ஆராய்ச்சி நிறுவனங்கள், மாநில / யூனியன் பிரதேச மீன்வளத் துறைகள், மீன்வளப் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் உள்ளிட்டோர் மெய்நிகர் வடிவில் இதில் பங்கேற்பார்கள்.

இந்திய மீன்வளத் துறை நாட்டின் பொருளாதாரத்தில் முக்கியப் பங்கு வகிப்பதுடன், வாழ்வாதாரம், வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார வாய்ப்புகளை வழங்குவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது, குறிப்பாக கிராமப்புறங்களில். 8,118 கி.மீ நீளமுள்ள விரிவான கடற்கரை, 2.02 மில்லியன் சதுர கி.மீ பரப்பளவைக் கொண்ட பரந்த பிரத்யேக பொருளாதார மண்டலம் மற்றும் ஏராளமான உள்நாட்டு நீர் வளங்களுடன், இந்தியா வளமான மற்றும் செழிப்பான மீன்வள சுற்றுச்சூழல் அமைப்பைக் காட்டுகிறது.






விண்வெளி தொழில்நுட்பங்கள் இந்திய கடல் மீன்வள மேலாண்மை மற்றும் மேம்பாட்டை கணிசமாக மேம்படுத்த முடியும். செயற்கைக்கோள் தொலையுணர்வு, புவி நோக்குதல், செயற்கைக்கோள் அடிப்படையிலான ஊடுருவல் அமைப்பு மற்றும் புவியியல் தகவல் அமைப்பு, செயற்கைக்கோள் தகவல் தொடர்பு, தரவு பகுப்பாய்வு மற்றும் செயற்கை நுண்ணறிவு போன்ற சில தொழில்நுட்பங்கள் இத்துறையில் பெரும் மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளன.

மத்திய அரசின் மீன்வளத் துறை, பிரதமரின் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கண்காணிப்பு, கட்டுப்பாடு மூலம் இந்தத் தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கு ஆதரவளிக்கிறது. இந்த ஆதரவில் மிக உயர் அதிர்வெண் ரேடியோக்கள், இடர் எச்சரிக்கை டிரான்ஸ்மிட்டர்கள் மற்றும் மீன்பிடி கப்பல்களுக்கான டிரான்ஸ்பாண்டர்கள் போன்ற தகவல் தொடர்பு மற்றும் கண்காணிப்பு சாதனங்களை வழங்குவது அடங்கும்.

மேலும், மத்திய அரசின் மீன்வளத்துறை, பிரதமரின் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கடல் மீன்பிடிக் கலன்களில் கண்காணிப்பு, கட்டுப்பாடு பணிகளுக்காக கப்பல் தகவல் தொடர்பு மற்றும் ஆதரவு அமைப்பிற்கான தேசிய செயலாக்கத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. தேசிய செயலாக்கத் திட்டத்தின் கீழ் 9 கடலோர மாநிலங்கள் மற்றும் 4 யூனியன் பிரதேசங்களில் ரூ.364 கோடி மதிப்பீட்டில் இயந்திரம் பொருத்தப்பட்ட படகுகள் உள்ளிட்ட கடல் மீன்பிடி கலங்களில் 1,00,000 டிரான்ஸ்பாண்டர்கள் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

# அஞ்சல் ஆயுள் காப்பீடு விற்பனை முகவர் தேர்வு: 19.08.2024 அன்று சென்னையில் நேர் காணல்




சென்னை, 12 ஆகஸ்ட் 2024: சென்னை வடக்குக் கோட்ட, முதுநிலை அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் அலுவலகம், அஞ்சல் ஆயுள் காப்பீடு/ கிராம அஞ்சல் ஆயுள் காப்பீடு விற்பனைக்காக புதிய நேரடி முகவர்களை ஈடுபடுத்தவிருக்கிறது. விருப்பமுள்ளவர்கள் கீழ்க்காணும் தகுதியை பெற்றிருப்பின் தலைமை அஞ்சலகம் (பூங்கா நகர் தலைமை அஞ்சல் அலுவலகம், சென்னை மத்திய ரயில் நிலையம் அருகே) சென்னை 600 003 என்ற முகவரியில் உள்ள அலுவலகத்தில் 19.08.2024 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெற உள்ள நேர்காணலில் கலந்து கொள்ளலாம்.

தேவையான தகுதிகள்:

கல்வித் தகுதி : குறைந்தது பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

வயது வரம்பு : 18 - வயதிலிருந்து.

பிரிவுகள் : சுய தொழில் செய்யும் / வேலையில்லா இளைஞர்கள், ஏதேனும் காப்பீட்டு நிறுவனத்தில் பணி புரிந்த முன்னாள் காப்பீட்டு ஆலோசகர்கள்/ முகவர்கள், அங்கன்வாடி மற்றும் மஹிளா மண்டல் பணியாளர்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள், முன்னாள் ராணுவத்தினர், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

விரும்பத்தக்க தகுதிகள்: ஆயுள் காப்பீடுகளை விற்பனை செய்வதில் முன் அனுபவம் உள்ளவர்கள், கணினிப் பயிற்சி உள்ளவர்கள் / சொந்தப்பகுதி பற்றி நன்கு அறிந்தவர்கள் மற்றும் சென்னை மாநகராட்சியை சார்ந்தவர்கள்.

இதர ஆயுள் காப்பீட்டு அலுவலகத்தில் முகவர்களாக இருப்பவர்கள், அஞ்சல் ஆயுள் காப்பீட்டு முகவர்களாக விண்ணப்பிக்க தகுதியில்லை.

மேற்கண்ட தகுதியுடையவர்கள் மூன்று புகைப்படத்துடன் (பாஸ்போர்ட் அளவு), அசல் மற்றும் இரண்டு நகல் - வயதுச்சான்று, முகவரிச்சான்று மற்றும் கல்விச்சான்றுடன் அணுகவும். நேர்காணலுக்கு பின் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் ஐந்தாயிரம் ரூபாய்க்கு தேசிய சேமிப்பு பத்திரத்தை பணப் பாதுகாப்பு பத்திரமாக வழங்க வேண்டும்.

இந்த நேர்காணல் அஞ்சல் ஆயுள் காப்பீட்டு பாலிசிகளை முகவர்கள் மூலம் விற்பனை செய்வதற்காக நடத்தப்படுகிறது. முகவர்களாக தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் பிடிக்கும் பாலிசியின் பிரீமியம் அடிப்படையில் ஊக்கத்தொகை வழங்கப்படும்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# கர்மயோகி இயக்கத்தின் இரண்டு இணையதளங்களை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தொடங்கி வைத்தார்

சென்னை, 12 ஆகஸ்ட் 2024: புதுதில்லி விஞ்ஞான் பவனில் இன்று நடைபெற்ற குடிமைப் பணி பயிற்சி நிறுவனங்களின் மாநாட்டில் மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், 'அம்ரித் கியான் கோஷ்' போர்ட்டலையும், 'ஆசிரியர் மேம்பாட்டு போர்ட்டலையும்' தொடங்கி வைத்தார்.



தேசிய திறன் மேம்பாட்டு ஆணையம் மற்றும் மிஷன் கர்மயோகி பாரத் ஆகியவற்றின் பயணத்தை டாக்டர் ஜிதேந்திர சிங் சுட்டிக்காட்டினார். "இது குடிமைப் பணி பயிற்சியை நாம் எவ்வாறு அணுகுகிறோம் என்பதில் ஒரு முன்னுதாரண மாற்றத்தைக் குறிக்கிறது, மேலும் இது உலகளாவிய கண்ணோட்டத்துடன் இந்திய நெறிமுறைகளில் வேரூன்றிய எதிர்காலத்திற்கு தயாராக உள்ள குடிமைப் பணியையும் சுட்டிக்காட்டுகிறது" என அவர் கூறினார்.

குறுகிய காலத்திற்குள், சிபிசி மற்றும் மிஷன் கர்மயோகி ஆகியவை நிர்வாக கட்டமைப்புடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன என்று டிஓபிடி அமைச்சர் மேலும் கூறினார், "தொழில்நுட்பம் மற்றும் நிர்வாகத்தின் பரிணாம வளர்ச்சியுடன், ஒவ்வொரு கட்டத்திலும் நாம் கற்றுக்கொள்ளவும் கற்றுக்கொள்ள வேண்டும்" என்று அவர் கூறினார்.

மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் (தனிப்பொறுப்பு), புவி அறிவியல் (தனிப்பொறுப்பு), பிரதமர் அலுவலகம், அணுசக்தி, விண்வெளி, பணியாளர், பொதுமக்கள் குறைகள் மற்றும் ஓய்வூதியங்கள் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், அம்ரித் கியான் கோஷ் என்ற இரண்டு இணைய தளங்களைத் தொடங்கி வைக்கும் போது, "எங்களது பகிரப்பட்ட கற்றல் வள அறிவு வங்கி, கல்வி நிறுவனங்கள் எப்போதும் மேற்கத்திய நாடுகளை நம்பியிருப்பதற்குப் பதிலாக இந்தியாவை மையமாகக் கொண்ட வழக்கு ஆய்வுகளை அணுக உதவும்" என்றார்.

ஒரு பயிற்சியாளர் தானாகவே ஒரு நல்ல ஆசிரியராக மாறுவதில்லை என்றும், பயிற்சியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் அரசு ஊழியர்களுக்கு அறிவை வழங்குவதை உறுதி செய்வதற்கு ஆசிரிய மேம்பாட்டுத் திட்டம் முக்கியமாக இருக்கும் என்றும் அவர் மேலும் எடுத்துரைத்தார்.

குடிமைப் பணி பயிற்சி நிறுவனங்களுக்கான தேசிய தரநிலைகளின் சாதனைகளை எடுத்துரைத்த டாக்டர் ஜிதேந்திர சிங், "நாங்கள் 140 க்கும் மேற்பட்ட பயிற்சி நிறுவனங்களுக்கு அங்கீகாரம் அளித்துள்ளோம், மேலும் ஒவ்வொரு அங்கீகாரமும் மிகவும் திறமையான, சேவையை நோக்கிய ஒரு படியை பிரதிபலிக்கிறது" என்றார்.

டாக்டர் ஜிதேந்திர சிங் 13 தர மேம்பாட்டுத் திட்டத்தையும் தொடங்கி வைத்தார். இது நமது பயிற்சி நிறுவனங்களை தொடர்ந்து மேம்படுத்துவதற்கான செயல் திட்டமாகும். 20 அமைச்சகங்களுக்கு அங்கீகாரம் வழங்கினார்.

1.4 பில்லியன் இந்தியர்களின் வாழ்க்கையைத் தொடும் ஆளுகையின் தரம், இந்த நிறுவனங்களில் அளிக்கப்படும் பயிற்சியின் நேரடி தாக்கத்திற்கு உள்ளாகும் என்று அவர் கூறினார். அரசு சாரா நிறுவனங்களுக்கு இந்தத் துறையைத் திறந்து விட்ட பின்னர் மிகக் குறுகிய காலத்திற்குள் சிபிசி மற்றும் விண்வெளி மற்றும் உயிரியல் தொழில்நுட்பத் துறை அடைந்த வெற்றிகளுக்கு இணையான அம்சங்களையும் அவர் சுட்டிக்காட்டினார். மற்ற துறைகளும் இணைந்து செயல்பட நேரம் தேவை என்பதால் இதில் சேருமாறு அவர் அறிவுறுத்தினார்.

திறன் மேம்பாட்டு ஆணையத்தின் தலைவர் அடில் ஜைனுல்பாய் மற்றும் மனிதவள உறுப்பினர் டாக்டர் ஆர்.பாலசுப்பிரமணியம்; டாக்டர் அல்கா மிட்டல், உறுப்பினர்-நிர்வாகம்; இந்தியா முழுவதிலுமிருந்து அங்கீகாரம் பெற்ற 20 அமைச்சகங்களின் மூத்த அதிகாரிகள் மற்றும் சி.எஸ்.டி.ஐ.யின் இயக்குநர்கள் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

## வரிக்குப் பிந்தைய இலாபத்தில் முந்தைய ஆண்டை விட 410% வளர்ச்சியுடன் கியூ1எப்ஒய்25 ரூ ல் சிறப்பான வருவாய் செயல்பாட்டை அறிவிக்கும் அப்போலோ மைக்ரோ சிஸ்டம்ஸ் லிமிடெட்

சென்னை, 12 ஆகஸ்ட் 2024: மின்னணுவியலில் பிரத்யேகமான பொருட்களின் வடிவமைப்பு, உருவாக்கம் மற்றும் அசெம்பிளியில் மற்றும் மின்னணுவியல் - பொறியியல் தீர்வுகள் வழங்குவதில் முன்னோடி என புகழ் பெற்றிருக்கும் அப்போலோ மைக்ரோ சிஸ்டம்ஸ் லிமிடெட், 2024 ஜுன் 30 அன்று முடிவடைந்த முதல் காலாண்டிற்கான தனது வருவாய் மற்றும் நிதிநிலை அறிக்கையை வெளியிட்டிருக்கிறது.




இது தொடர்பாக இந்நிறுவனத்தின் மேலாண்மை குழு மேலும் தெரிவித்திருப்பதாவது : "நிதியாண்டு 25-ல் முதல் காலாண்டில் அப்போலோ மைக்ரோ சிஸ்டம்ஸ் லிமிடெட் (ஏஎம்எஸ்) சாதித்திருக்கும் சிறப்பான முன்னேற்றம் பற்றிய தகவலைப் பகிர்ந்து கொள்வதில் நாங்கள் மகிழ்ச்சியும், உற்சாகமும் கொள்கிறோம். எமது இயக்க செயல்பாடுகளின் பல்வேறு பரிமாணங்களில் கணிசமான மேம்பாடுகளையும் மற்றும் குறிப்பிடத்தக்க வெற்றிகளையும் அடைந்த கால அளவாக இக்காலாண்டு இருந்திருக்கிறது. புத்தாக்கம், இயக்க செயல்பாட்டில் நேர்த்தி மற்றும் நிலைப்புத்தன்மையுள்ள வளர்ச்சி ஆகியவற்றின் மீது எமது தளராத அர்ப்பணிப்பு, எமது செயல்பாட்டை முன்னேற்றப் பாதையில் தொடர்ந்து அழைத்துச் செல்கிறது மற்றும் எமது சிறப்பான எதிர்காலத்தை வடிவமைக்கிறது. கியூ1எப்ஒய்25 - ல் வலுவான ஆர்டர் செயலாக்க பணியின் காரணமாக ரூ.912.02 மில்லியன் என்ற வருவாயை ஏஎம்எஸ் எட்டியிருக்கிறது. கியூ1எப்ஒய்25 - ல் இது ரூ.576.91 மில்லியாக இருந்தது. கியூ1எப்ஒய்25 - ல் ரூ.127.42 மில்லியனாக இருந்த எமது எபிட்டா, கியூ1எப்ஒய்25 - ல் ரூ.223.71 மில்லியனாக உயர்ந்திருக்கிறது. இயக்க செயல்பாடுகளின் அதிகரித்த செயற்பரப்பின் காரணமாக, 75.57% என்ற வளர்ச்சி எட்டப்பட்டிருக்கிறது. கியூ1எப்ஒய்25 - ல் ரூ.16.54 மில்லியனாக இருந்ததோடு ஒப்பிடுகையில், கியூ1எப்ஒய்25- ல் வரிக்குப் பிந்தைய (பிஏடி) இலாபம் ரூ.84.29 மில்லியனாக அதிகரித்திருக்கிறது. கியூ1எப்ஒய்24 - ல் 2.87% ஆக இருந்த பிஏடி இலாப வரம்புகள் கியூ1எப்ஒய்25 - ல் 9.24% ஆக உயர்ந்திருக்கிறது. இயக்க செயல்பாடுகளில் நேர்த்தி மற்றும் நிலைப்புத்தன்மையுள்ள வளர்ச்சியில் எமது பொறுப்புறுதிகளை இந்த நிதிசார் சாதனைகள் வலுவாக அடிக்கோடிட்டு காட்டுகின்றன. எதிர்காலத்தில் தொடர்ச்சியான வெற்றியை அடைவதற்கு ஏஎம்எஸ் - ன் தகுதிநிலைக்கு சான்றாக இவை திகழ்கின்றன. கியூ1எப்ஒய்25- க்கான ஏஎம்எஸ் - ன் ஆர்டர் புக், தொடர்ந்து வளர்ச்சியடைந்து வரும் செயல்திட்டங்களினால் வலுவான முன்னேற்றம், எதிர்காலத்தில் இருக்கும் என்பதை பிரதிபலிக்கிறது, ஏஎம்எஸ் - ன் சந்தை தலைமைத்துவ பண்புகளையும், வாடிக்கையாளர்கள் வைத்திருக்கும் ஆழமான நம்பிக்கையையும் இது காட்டுகிறது. பல்வேறு துறைகளிலும் அதிகரித்து வரும் தேவையின் காரணமாக இந்நிறுவனத்தின் ஆர்டர் புக் கணிசமாக வளர்ச்சி கண்டிருக்கிறது, இந்த ஆர்டர்களின் பன்முகத்தன்மையும் மற்றும் தரமும் நிலையான வருவாய் வரத்தையும் மற்றும் மேம்பட்ட இலாபமீட்டல் நிலையையும் உறுதி செய்கின்றன. உருவாகி வரும் வாய்ப்புகளை சிறப்பாக பயன்படுத்தவும் மற்றும் வளர்ச்சி உத்வேகத்தை தொடர்ந்து பேணவும் சரியான நிலையில் ஏஎம்எஸ் - ஐ இந்த வலுவான ஆர்டர் புக் நிலைநிறுத்துகிறது.

## அதி நுண்ணிய ஜெரோஜெல் கட்டு ரத்தத்தை வேகமாக உறைவித்து உயிரைக் காப்பாற்றும்

சென்னை, 12 ஆகஸ்ட் 2024: ஆராய்ச்சியாளர்கள் சிலிக்கா நானோ துகள்கள் மற்றும் கால்சியம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு வாயு கலப்பு ஜெரோஜெல் டிரஸ்ஸிங்கை உருவாக்கியுள்ளனர், இது ரத்த உறைவுக்கு விரைவாக உதவுகிறது. மேலும் கட்டுப்பாடற்ற இரத்தப்போக்குக்கு நிவாரணம் அளிக்கிறது. கலப்பு ரத்த உறைவு விகிதத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டியது.கட்டுப்பாடற்ற இரத்தக்கசிவு, விபத்துக்கள் அல்லது காயங்கள் மற்றும் ராணுவ அல்லது அறுவை சிகிச்சை நடவடிக்கைகளின் போது ஏற்படும் அதிர்ச்சிகரமான மரணத்திற்கு முக்கிய காரணங்களில் ஒன்றாகும். அதிர்ச்சி மரணங்களில் 40% க்கும் அதிகமானவை கடுமையான ரத்த இழப்பால் ஏற்படுகின்றன.

பொதுவாக பயன்படுத்தப்படும் முதலுதவிப் பொருள் அல்லது காயம் ஏற்பட்ட இடத்திற்கு ரத்த ஓட்டம் குறைவதன் மூலம் செயல்படும் மனித உடலின் இயற்கையான பாதுகாப்பு, ஃபைப்ரின் செயல்படுத்தல் மூலம் பிளேட்லெட் பிளக் உருவாக்கம் மற்றும் ரத்த உறைவு பாதைகளை செயல்படுத்துதல் ஆகியவை கடுமையான ரத்தக்கசிவை நிறுத்த போதுமானதாக இல்லை. எனவே, ரத்த இழப்புகளைக் குறைக்க மேம்பட்ட ஹீமோஸ்டேடிக் பொருட்கள் அவசரமாக தேவைப்படுகின்றன.

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் (டி.எஸ்.டி) தன்னாட்சி நிறுவனமான புனேவில் உள்ள அகர்கர் ஆராய்ச்சி நிறுவனம் (ஏ.ஆர்.ஐ) சிலிக்கா நானோ துகள்கள் (எஸ்.ஐ.என்.பி) மற்றும் கால்சியம் போன்ற ஒரு கலத்திற்குள் (அகோனிஸ்டுகள்) ஒரு ஏற்பியுடன் பிணைக்கும் பொருட்களுடன் கூடுதலாக மிகவும் நுண்ணிய பஞ்சுபோன்ற ஜெரோஜெல் ஹீமோஸ்டேடிக் டிரஸ்ஸிங்கை உருவாக்கியுள்ளது. இந்த நிறுவனத்தின் விஞ்ஞானிகள் கலப்பு பொருளை ஆய்வு செய்தனர், மேலும் இது வணிக ஆடை உறைதல் திறனுடன் ஒப்பிடும்போது இரத்த உறைவு குறியீட்டை 13 மடங்கு அதிகரித்துள்ளது என்பதைக் கண்டறிந்தது.

பிளேட்லெட்டுகள் ரத்தத்தின் ஒரு முக்கிய அங்கமாகும், ரத்த உறைவு செயல்முறைக்கு இவை பங்களிக்கின்றன. பிளேட்லெட் வடிவத்தில் மாற்றம், கால்சியம் சுரப்பு மற்றும் பிளேட்லெட் மேற்பரப்பில் ஏற்பிகளின் செயல்பாடு போன்ற பல காரணிகள் ரத்த உறைதலின் சிக்கலான பாதையில் பங்கு வகிக்கின்றன. ஜெரோஜெல் ஹீமோஸ்டேடிக் டிரஸ்ஸிங் செயல்படுத்தப்பட்ட பிளேட்லெட்டுகளில் நன்கு உருவான சூடோபோடியாவின் வளர்ச்சியின் காரணமாக மேம்பட்ட பிளேட்லெட் திரட்டலைக் காட்டியது, இதன் விளைவாக உறைதல் செயல்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கிறது.









"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# பாரத் மிகுமின் நிறுவனம் - அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள், அண்டை நாடுகளிலிருந்து மூலப்பொருட்கள் வாங்குவதற்கு ஒன்றிய அரசு பாரபட்சமான கட்டுப்பாடு! பிஹெச்இஎல் நிறுவனத்திற்கு பல்லாயிரம் கோடி ரூபாய் இழப்பு!! இப்பிரச்சனைக்கு உரிய தீர்வு காண வலியுறுத்தி பிரதமருக்கு சிபிஐ (எம்) கடிதம்!!!



சென்னை, 12 ஆகஸ்ட் 2024: இந்தியாவின் மகாரத்தின நிறுவனமாகத் திகழும் பி எச் ஈ எல் பொதுத்துறை நிறுவனம் குறித்து தங்களிடம் முறையிட விரும்புகிறோம். மேலே குறிப்பிட்ட, 2020 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட பொதுக் கொள்முதல் மீதான கட்டுப்பாட்டு ஆணையால், பி எச் ஈ எல் நிறுவனம் ரூபாய் 4000 கோடி அளவுக்கு நஷ்டத்தை சந்திக்கும் இக்கட்டான நிலையில் உள்ளது. கீழே குறிப்பிட்டுள்ள பிரச்சனைகளின் வீச்சைத் தாங்கள் ஆராய வேண்டும் என்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், இந்திய அரசாங்கம் இந்தப் பிரச்சனையைக் களைவதற்ககுத் தேவையான அனைத்து நேர்மறையான நடவடிக்கைகளையும் எடுத்திட வேண்டும் என்றும் நாங்கள் வலியுறுத்துகிறோம். பொது நிதி விதிகள் 2017-ல் கடந்த 2020 ஜூலையில் கொண்டுவரப்பட்ட திருத்தங்கள், பி எச் ஈ எல் நிறுவனத்தின் உற்பத்தித்திறன் மீது ஏற்படுத்தியுள்ள நாசகர தாக்கத்தை தாங்கள் ஆய்வு செய்திட வேண்டும் என்றும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். கடந்த 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதம் பொது நிதி விதிகள் 2017-ல் கொண்டுவரப்பட்ட திருத்தங்கள், இந்திய அரசாங்கம் இந்தியாவுடன் எல்லைகளைப் பகிர்ந்துகொள்ளும் நாடுகளில் இருந்து ஏலதாரர்களைக் கட்டுப்படுத்துவதற்கு வழிவகைசெய்கிறது. தேசிய பாதுகாப்பு, இராணுவம் என்கிற அடிப்படையில் இந்தக் கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டதாக சொல்லப்படுகிறது. இந்த விதிகள் பொதுத்துறை வங்கிகள், நிதி நிறுவனங்கள், தன்னாட்சி முகமைகள், மத்திய பொதுத் துறை நிறுவனங்கள், அரசு நிதி பெறும் பொது-தனியார் கூட்டுத்திட்டங்கள் ஆகிவற்றிக்குப் பொருந்தும். மாநில அரசாங்கங்களும் இந்த திருத்தப்பட்ட நிதி விதிகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அதே சமயம், இந்த விதிகள் தனியார் நிறுவனங்களுக்குப் பொருந்தாது; இந்தியாவுடன் எல்லைகளைப் பகிர்ந்துகொள்ளும் நாடுகளிடம் இருந்து கொள்முதல் செய்வதற்கோ, அந்த நாடுகளின் வர்த்தக முகமைகளுடன் வர்த்தகம் செய்வதற்கோ தனியாருக்கு எந்தவிதத் தடையும் கிடையாது.

இந்திய அரசின் பொதுத்துறை நிறுவனமாக 63.17% பங்குகளுடன் தொடங்கப்பட்ட பி எச் ஈ எல் நிறுவனம், நாடுமுழுவதிலும் இன்றைக்கு16 உற்பத்தி நிலையங்களைக் கொண்டிருக்கிறது; தமிழ்நாட்டில் திருச்சி, ராணிப்பேட்டை, திருமயம் ஆகிய இடங்களில் உள்ள 3 உற்பத்தியகங்களும் இவற்றில் உள்ளடக்கம். இந்தியாவின் மின் தேவையைப் பூர்த்தி செய்வதில் பி எச் ஈ எல் நிறுவனத்திற்கு முக்கிய பங்குள்ளது. தற்போதைக்கு 1,40,000 கோடி ரூபாய் மதிப்பிலான ஆர்டர்கள் பி எச் ஈ எல் நிறுவனத்தின் கைவசம் இருக்கின்றன. இந்த ஆர்டர்கள் அனைத்தும் எல் 1 என்கிற குறைந்த விலை ஏலதாரர் அடிப்படையில், , முழுக்க முழுக்க பி எச் ஈ எல் நிறுவனத்தின் செயல்திறன் மீதான மதிப்பீடுகளின் அடிப்படையில், எவ்வித சிபாரிசும், தலையீடும் இன்றி பி எச் ஈ எல் நிறுவனத்தால் பெறப்பட்டவை. 15-20% அளவிற்கு குறைக்கப்பட்ட விலையில் எல் 1 அடிப்படையில் இந்த ஆர்டர்கள் பெறப்பட்டன. பி எச் ஈ எல் நிறுவனம் முந்தைய காலங்களில் பெற்றுவந்ததைப் போல, எல்லைப் பகிர்வு நாடுகளில் இருந்து மூலப்பொருட்களைத் தருவிக்கலாம் என்ற திட்டத்தின் அடிப்படையில் இந்த ஆர்டர்கள் வகுக்கப்பட்டு, பெறப்பட்டன. ஜி எஃப் ஆர் - ல் கொண்டுவரப்பட்ட புதிய திருத்தங்கள், பிற நாடுகளில் இருந்து 20-40% அளவிற்கு கூடுதல் விலையில் மூலப்பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு பி எச் ஈ எல் நிறுவனத்தைத் தள்ளியுள்ளன. இதன் விளைவாக, குறைவான லாபம் என்ற அடிப்படையில் பெறப்பட்ட இந்தப் புதிய ஆர்டர்களில் இருந்து பி எச் ஈ எல் நிறுவனத்துக்கு துளிலாபமும் கிடைக்காது.

பி எச் ஈ எல் நிறுவனம் கொதிகலன்களை (பாய்லர்கள்) உற்பத்தி செய்வதற்குத் தேவையான மூலப்பொருட்களை உற்பத்தி செய்யும் உற்பத்தியகங்களை இந்தியாவில் வளர்த்தெடுக்காத காரணத்தால், பி எச் ஈ எல் தனக்கான குறைந்த விலை மூலப்பொருள் இறக்குமதிக்கு எல்லைப் பகிர்வு நாடுகளை சார்ந்திருக்கும் நிலையில் உள்ளது. புதிய கட்டுப்பாடுகளால், மூலப் பொருட்களை உரிய நேரத்தில் தருவிப்பது, உற்பத்தி செய்வது, உற்பத்தி செய்த பாய்லர்களை கையளிப்பது என அனைத்துப் பணிகளும் பாதிக்கப்படுகின்றன; இதன் விளைவாக குறித்த நேரத்தில் உற்பத்தி செய்து பொருட்களை வழங்காத தவறுக்காக பி எச் ஈ எல் நிறுவனம் ரூபாய் 6000 கோடி தண்டத்தொகை கட்டும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இந்தக் கட்டுப்பாடுகளால் பி எச் ஈ எல் நிறுவனத்தின் வருவாய் பாதிக்கப்படுவதால், அந்த நிறுவனத்தின் 30,000 நிரந்தரப் பணியாளர்கள், 20,000 ஒப்பந்தப் பணியாளர்கள், மற்றும் இவர்களைச் சார்ந்துள்ள லட்சக்கணக்கான குடும்ப உறுப்பினர்களுடைய எதிர்காலமும் பாதிக்கப்படும் சூழல் ஏற்பட்டுள்ளது.

புதிய திருத்தங்களால் ஏற்பட்டுள்ள இந்த புதிய நிலைமை, பிரம்மாண்டமான பொதுத்துறை நிறுவனமான பி எச் ஈ எல் நிறுவனத்தின் செயல்திறனைக் குறைக்கு முற்படுகிறது. பி எச் ஈ எல் நிறுவனத்தின் மீதான இத்தகைய எதிர்மறையான தாக்கம் என்பது சந்தையில் பி எச் ஈ எல் நிறுவனத்துடைய நிலையையும், மதிப்பையும் சரியச்செய்து, தனியார்களின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும். பி எச் ஈ எல் போன்ற பிரம்மாண்டமான ஒரு பொதுத்துறை நிறுவனத்திற்கு ஏற்படுத்தப்படும் இத்தகைய பாதிப்புகள், மக்கள் நல்வாழ்வு உள்ளிட்ட பல்வேறு துறைகளை வலுவிழக்கச் செய்யும் தாக்கங்களைக் கொண்டிருக்கும். இந்தப் பின்னணியில், பொதுத்துறை நிறுவனங்கள் மீது பாரபட்சமான கட்டுப்பாடுகளை விதிக்கிற ஜி எஃப் ஆர் 2017 - ல் கொண்டுவரப்பட்ட திருத்தங்களை நீக்குவதற்கு வேண்டிய அனைத்தையும் தாங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று தங்களை வேண்டி கேட்டுக்கொள்கிறோம். தங்களுடைய இந்தத் தலையீடு பி எச் ஈ எல் நிறுவனத்தை பாதுகாக்கும் என்பதோடு, நம்முடைய மாபெரும் தேசத்தையும், நம்முடைய மக்களையும் பாதுகாத்திடும்.

# 1,000 குடிமைப் பணி அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்க இந்தியா மாலத்தீவு புரிந்துணர்வு ஒப்பந்தம்

சென்னை, 12 ஆகஸ்ட் 2024: மாலத்தீவின் மாலேயில் ஆகஸ்ட் 9-ம் தேதி இரு நாடுகளுக்கும் இடையிலான மேம்பாட்டு கூட்டாண்மை விவாதங்களின் ஒரு பகுதியாக 2024-2029 காலகட்டத்தில் 1000 மாலத்தீவு குடிமைப்பணி அதிகாரிகளின் திறனை வளர்ப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இந்தியாவின் வெளியுறவு அமைச்சர் டாக்டர் எஸ் ஜெய்சங்கர் மற்றும் மாலத்தீவின் வெளியுறவு அமைச்சர் திரு மூசா ஜமீரும் புதுப்பித்தனர்.

பங்களாதேஷ், தான்சானியா, காம்பியா, மாலத்தீவுகள், இலங்கை மற்றும் கம்போடியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த அரசு ஊழியர்களுக்கான திறன் மேம்பாட்டு திட்டங்களை வெளியுறவு அமைச்சகத்தின் வழிகாட்டுதலின் கீழ், நல்லாட்சிக்கான தேசிய மையம் வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

திறன் மேம்பாட்டு முயற்சிகளின் ஒரு பகுதியாக, இந்திய அரசின் நல்லாட்சிக்கான தேசிய மையம், மாலத்தீவு குடியரசின் மாலத்தீவு குடிமைப்பணிகள் ஆணையம் இடையே 1000 மாலத்தீவு அரசு ஊழியர்களுக்கு திறன் மேம்பாட்டுத் திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 2019, ஜூன் 8 அன்று கையெழுத்தானது.

2024-ம் ஆண்டில், மாலத்தீவின் நிரந்தர செயலாளர்கள், தலைமைச் செயலாளர்கள், உயர்நிலைப் பிரதிநிதிகள் உட்பட மொத்தம் 1000 அரசு ஊழியர்களுக்கு கள நிர்வாகத்தில் மொத்தம் 32 திறன் மேம்பாட்டு திட்டங்களில் பயிற்சி அளித்ததன் மூலம் நல்லாட்சிக்கான தேசிய மையம் குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளது.

இந்த ஒத்துழைப்பின் வெற்றியை அங்கீகரித்த மாலத்தீவு வெளியுறவு அமைச்சகம், புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு புதுப்பிக்குமாறு கேட்டுக் கொண்டது. 2024, ஆகஸ்ட் 9 அன்று, புரிந்துணர்வு ஒப்பந்தம் அதிகாரப்பூர்வமாக புதுப்பிக்கப்பட்டது. இதன் மூலம் 2029-க்குள் மேலும் 1,000 மாலத்தீவு அரசு ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்க உறுதியளிக்கப்பட்டுள்ளது. இது மாலத்தீவு குடிமைப் பணியாளர்களின் திறன்களை மேம்படுத்துவதுடன், இந்தியா மற்றும் மாலத்தீவு இடையேயான உறவுகளை மேலும் வலுப்படுத்தும்.

# யானைகளைப் பாதுகாக்கும் சமூக முயற்சிகளுக்கு பிரதமர் மோடி பாராட்டு

சென்னை, 12 ஆகஸ்ட் 2024: உலக யானைகள் தினத்தை முன்னிட்டு யானைகளைப் பாதுகாக்க மேற்கொள்ளப்படும் பல்வேறு சமூக முயற்சிகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டியுள்ளார். யானைகள் செழித்து வளர உகந்த வாழ்விடத்தை உறுதி செய்ய சாத்தியமான அனைத்தையும் வழங்குவதற்கான உறுதிப்பாட்டையும் திரு மோடி மீண்டும் தெரிவித்துள்ளார்.

யானைகளின் மதிப்பையும், நமது கலாச்சாரம் மற்றும் வரலாற்றில் அவற்றின் முக்கியத்துவத்தையும் பிரதமர் எடுத்துரைத்துள்ளார். கடந்த சில ஆண்டுகளாக யானைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை அவர் பாராட்டியுள்ளார்.

சமூக ஊடக எக்ஸ் தளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது;

"உலக யானைகள் தினம் என்பது யானைகளைப் பாதுகாப்பதற்கான பரந்த அளவிலான சமூக முயற்சிகளைப் பாராட்டும் ஒரு சந்தர்ப்பமாகும். அதே நேரத்தில், யானைகளுக்கு அவை செழித்து வளர்வதற்கு உகந்த வாழ்விடத்தைப் பெறுவதை உறுதி செய்ய நம்மால் முடிந்த அனைத்தையும் செய்வதற்கான உறுதிப்பாட்டை நாம் மீண்டும் வலியுறுத்துகிறோம். இந்தியாவில் யானை என்பது நமது கலாச்சாரம் மற்றும் வரலாற்றுடனும் இணைக்கப்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக, யானைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவது மகிழ்ச்சியளிக்கிறது."

















தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
திங்கள்கிழமை,
ஆகஸ்ட் 12, 2024

# அமெரிக்காவில் உயர்கல்வி பயில்வது குறித்த எஜுகேஷன் யுஎஸ்ஏ கண்காட்சியை ஆகஸ்ட் 17 அன்று சென்னையில் அமெரிக்க துணைத் தூதரகம் நடத்துகிறது

சென்னை, 12 ஆகஸ்ட் 2024: அமெரிக்க உயர்கல்வி குறித்த அமெரிக்க அரசின் அதிகாரப்பூர்வ தகவல் அமைப்பான எஜுகேஷன் யுஎஸ்ஏ, ஆகஸ்ட் 16, 2024 அன்று ஹைதராபாத்தில் தொடங்கி ஆகஸ்ட் 25 அன்று புது தில்லியில் முடிவடையும் வகையில், கல்வி சார்ந்த எட்டு நிகழ்வுகளை நாடு முழுவதும் நடத்துகிறது. சென்னையில் ஆகஸ்ட் 17 அன்று ஹோட்டல் ஹில்டனில் மதியம் 2 மணி முதல் மாலை 5 மணி வரை இந்நிகழ்ச்சி நடைபெறும்.

இளநிலை, முதுநிலை மற்றும் முனைவர் படிப்புகளில் சேர விரும்பும் மாணவர்கள், அமெரிக்கா முழுவதிலும் உள்ள 80-க்கும் மேற்பட்ட அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளின் பிரதிநிதிகளைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெறுவார்கள். பங்கேற்புக் கட்டணம் இல்லை, ஆனால் பதிவு செய்தல் அவசியம். மேலும் விவரங்களுக்கும் பதிவு செய்துகொள்வதற்கும், பார்வையிடவும்: https://bit.ly/EdUSAFair24Emb

கல்விக் கண்காட்சிகளின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதர் எரிக் கார்செட்டி, "எஜுகேஷன் யுஎஸ்ஏ கண்காட்சிகள் அமெரிக்கா வழங்கும் அற்புதமான கல்வி வாய்ப்புகள் குறித்து மேலும் அறிந்துகொள்வதற்கான சிறந்த வழியாகும். நீங்கள் அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கலை அல்லது வணிகம் ஆகிய எந்தத் துறையில் ஆர்வம் கொண்டவராக இருந்தாலும், உங்கள் கனவுகளை அடைவதற்கு உதவக்கூடிய படிப்பு இங்கு உள்ளது. பெரிய அளவிலான அமெரிக்கக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் பிரதிநிதிகளைச் சந்திப்பதற்கும் கல்லூரி விண்ணப்பம் மற்றும் விசா செயல்முறை பற்றிய தகவல் அமர்வுகளில் கலந்துகொள்வதற்குமான வாய்ப்புகளை இந்நிகழ்வுகள் வழங்குகின்றன. சேர்க்கைகள், உதவித்தொகைகள், வளாக வாழ்க்கை மற்றும் அமெரிக்காவில் கல்வி பெறுவது குறித்த பல தகவல்களை நீங்கள் இங்கு நேரடியாகப் பெறுவீர்கள். அமெரிக்காவில் பயில்வது குறித்த உங்கள் கனவை நனவாக்குவதற்குத் தேவையான அனைத்து தகவல்களையும் உதவிகளையும் மாணவர்களும் அவர்களது குடும்பத்தினரும் பெறுவதை உறுதி செய்வதே எங்கள் குறிக்கோள்," என்று கூறினார்.

இந்த நிகழ்வில் பங்கேற்கும் அமெரிக்க உயர்கல்வி நிறுவனங்கள், அமெரிக்கா முழுவதும் இளநிலை, முதுநிலை மற்றும் முனைவர் படிப்புகளில் பல்வேறு கல்வித் திட்டங்களை வழங்குகின்றன. அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள், எஜுகேஷன் யுஎஸ்ஏ ஆலோசகர்கள் மற்றும் அமெரிக்க தூதரகப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல்கள், மாணவர்கள் அமெரிக்க உயர்கல்வி பற்றிய தகவலறிந்த தேர்வுகளை மேற்கொள்ளவும், அமெரிக்க மாணவர் விசா விண்ணப்ப செயல்முறையைப் பற்றி அறிந்துகொள்ளவும், அமெரிக்காவில் கல்வி பெறுவது குறித்தும் வாழ்வது குறித்தும் ஆழமான புரிதலைப் பெறவும் உதவும்.

# 2025-ஆம் நிதியாண்டின் முதலாம் காலாண்டில் அபார வருமானம் கண்ட சிகாச்சி இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்! எபிட்டா கடந்த ஆண்டை விட 28% உயர்வு!

சென்னை, 12 ஆகஸ்ட் 2024: செயலில் உள்ள மருந்து மூலப்பொருட்கள், தரமான துணைப் பொருட்கள், வைட்டமின் மினரல் ஊட்டச்சத்து கலவைகள், செயல்பாடுகள் மற்றும் பராமரிப்பு (ஓ&எம்) சேவைகளில் ஈடுபட்டுள்ள முன்னணி மருந்து நிறுவனமான சிகாச்சி இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், 06 ஆகஸ்ட் 2024 அன்று நடைபெற்ற அதன் வாரியக் கூட்டத்தில், ஜூன் 30, 2024 உடன் முடிவடைந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட நிதி முடிவுகளை அறிவித்தது.

ஜூன் 30, 2024 உடன் முடிவடைந்த காலாண்டில் (ஒருங்கிணைக்கப்பட்டது), நிறுவனம் செயல்பாடுகள் மூலம் ரூ. 957 மில்லியன் வருமானம் பெற்றுள்ளதாக அறிவித்துள்ளது. இது கடந்த ஆண்டை விட 13% வளர்ச்சியாகும். வட்டி, வரிகள், தேய்மானம் மற்றும் பணமதிப்பிழப்புக்கு முந்தைய வருவாய் (எபிட்டா) ஆனது கடந்த ஆண்டை விட 28.05% உயர்ந்து, ரூ. 164 மில்லியனில் (2024-ஆம் நிதியாண்டின் முதலாம் காலாண்டு) இருந்து ரூ. 210 மில்லியன் (2025-ஆம் நிதியாண்டின் முதலாம் காலாண்டு) ஆக அதிகரித்துள்ளது. எபிட்டா விளிம்பு 19.40% இலிருந்து 21.90% (2025-ஆம் நிதியாண்டின் முதலாம் காலாண்டு) ஆக 250 அடிப்படைப் புள்ளிகள் (பி பி எஸ்) அதிகரித்துள்ளது. வரிக்குப் பிந்தைய லாபம் (பி ஏ டி) ஆனது கடந்த ஆண்டை விட 17.43% உயர்ந்து, ரூ. 109 மில்லியனில் (2024-ஆம் நிதியாண்டின் முதலாம் காலாண்டு) இருந்து ரூ. 128 மில்லியன் (2025-ஆம் நிதியாண்டின் முதலாம் காலாண்டு) ஆக அதிகரித்துள்ளது. மார்ச் 31, 2024 உடன் முடிவடைந்த ஆண்டில், நிறுவனம் அதன் செயல்பாடுகளின் மூலமான வருவாயில் 32.08% வளர்ச்சியைக் கண்டது, ரூ. 3020 மில்லியனில் இருந்து (2023-ஆம் நிதியாண்டு) ரூ. 3989 மில்லியன் (2024-ஆம் நிதியாண்டு) ஆக உயர்ந்துள்ளது. எபிட்டா கடந்த ஆண்டை விட 30.49% அதிகரித்து, ரூ. 587 மில்லியனில் (2023-ஆம் நிதியாண்டு) இருந்து ரூ. 766 மில்லியன் (2024-ஆம் நிதியாண்டு) ஆக வளர்ச்சி கண்டுள்ளது. எபிட்டா விளிம்பு 19.20% ஆக இருந்தது. பி ஏ டி ஆனது கடந்த ஆண்டை விட 31.19% உயர்ந்து ஒரு வலுவான வளர்ச்சியைப் பதிவுசெய்தது, ரூ. 436 மில்லியனில் (2023-ஆம் நிதியாண்டு) இருந்து ரூ. 572 மில்லியன் (2024-ஆம் நிதியாண்டு) ஆக உயர்ந்துள்ளது. தேசிய பங்குச் சந்தை (என் எஸ் ஈ) மற்றும் மும்பை பங்குச் சந்தையில் (பி எஸ் ஈ) பொதுவில் பட்டியலிடப்பட்ட நிறுவனமான சிகாச்சி இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், செயலில் உள்ள மருந்து மூலப்பொருட்கள், உயர்தர துணை பொருட்கள், வைட்டமின் மினரல் சத்து கலவைகள் மற்றும் ஓ&எம் சேவைகளை வழங்குவதில் அதன் அசைக்கவியலா அர்ப்பணிப்புக்காக அறியப்பட்ட உலகளாவிய அங்கீகாரம் பெற்ற மருந்து நிறுவனமாகும். 33 ஆண்டுகளுக்கும் மேலான தொழில் அனுபவத்துடன், 62 நாடுகளில் பரவியுள்ள மருந்து மற்றும் ஊட்டச்சத்து மருந்து நிறுவனங்களுக்கு சிகாச்சி நம்பகமான கூட்டாளியாக உருவெடுத்துள்ளது. டபிள்யூஎச்ஓ ஜிஎம்பி, எக்சிபாட் ஜிஎம்பி, ஐஎஸ்ஓ, கோஷர், ஹலால் மற்றும் பல உலகளாவிய தரச் சான்றிதழ்களைப் பெற்றுள்ள, தெலுங்கானா, குஜராத் மற்றும் கர்நாடகாவில் உள்ள 5 பல்வேறு ஆலைகளில் நிறுவனத்தின் பல்வேறு உற்பத்தி பொருட்களின் தொகுப்பானது தயாரிக்கப்படுகிறது. ஹைதராபாத்தை தலைமையிடமாகக் கொண்டு அமைந்துள்ள சிகாச்சி இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் ஆனது அமெரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் தனது துணை நிறுவனங்களைக் கொண்டுள்ளது.

# ஜெட்வெர்க் - ன் இயக்குனர்கள் குழுவில் இணையும் வினோத் குமார் தாசரி!



சென்னை, 12 ஆகஸ்ட் 2024: உலகின் மிகப்பெரிய ஒப்பந்த உற்பத்தி சந்தையான ஜெட்வெர்க், வினோத் குமார் தாசரியை அதன் இயக்குநர்கள் குழுவில் நியமிப்பதாக இன்று அறிவித்தது. திரு. தாசரி, ஆட்டோமோட்டிவ் மற்றும் இன்ஜினியரிங் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் உற்பத்தித் தொழில்களை வழிநடத்துதல் மற்றும் அளவிடல் போன்ற துறைகளில் தனக்குள்ள சுமார் நான்கு தசாப்த கால அனுபவத்தை உடன் எடுத்து வருகிறார்.

நிறுவனத்தின் வளர்ச்சிப் பாதையில் ஒரு முக்கியமான கட்டத்தில் திரு. தாசரி, ஜெட்வெர்க் குழுவுடன் இணைகிறார். நுகர்வோர் மின்னணுவியல், விமானவியல் புதுப்பிக்கத்தக்கவை மற்றும் தொழில்துறை போன்ற முக்கிய துறைகளில் இது மூலோபாய ஊடுருவலை ஏற்படுத்துகிறது. நிரூபிக்கப்பட்ட வெற்றிகரமான சாதனைப் பதிவுகளுடன், அவர் ஜெட்வெர்க் இன் தலைமைக் குழுவுக்கு விலைமதிப்பற்ற வழிகாட்டுதலையும் மூலோபாய நுண்ணறிவுகளையும் வழங்குவார். அவர் ஜெட்வெர்க் இயக்குனர்கள் குழுவில் ஜூலை 1, 2024 முதல் இணைந்திருக்கிறார். இந்த நியமனம் குறித்து ஜெட்வெர்க் -ன் இணை நிறுவனரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான அமிர்த ஆச்சார்யா கூறுகையில், "ஜெட்வெர்க் - ன் இயக்குநர்கள் குழுவிற்கு திரு வினோத் தாசரியை வரவேற்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். உற்பத்தி சிக்கல்களைப் பற்றிய அவரது ஆழமான புரிதல், அவரது நிரூபிக்கப்பட்ட தலைமைத்துவத் திறன்கள் போன்றவை ஜெட்வெர்க் - ன் தொடர்ச்சியான வளர்ச்சி மற்றும் வெற்றியை வழிநடத்துவதில் உறுதுணையாக இருக்கும். ஒப்பந்த தயாரிப்பு சந்தையில் எங்கள் திறன்களை மேலும் வலுப்படுத்த திரு தாசரியின் மேம்பட்ட கண்ணோட்டங்கள் விலைமதிப்பற்ற ஒன்றாக அமையும் என்று நாங்கள் நம்புகிறோம் என்று கூறினார்."

ஜெட்வெர்க் இல் புதிதாக நியமிக்கப்பட்ட இயக்குனரான வினோத் குமார் தாசரி கூறுகையில், "ஜெட்வெர்க் -ன் குழுவுடன் இணைவதிலும், உற்பத்தித் துறையில் புதுமைகளைப் புகுத்துவதில் முன்னணியில் இருக்கும் ஒரு நிறுவனத்தின் ஒரு அங்கமாக இருப்பதிலும் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஜெட்வெர்க் - ன் தனித்துவமான பணிக்களமும், தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கான அர்ப்பணிப்பும் உண்மையிலேயே மிகவும் சிறப்பானதாகும். நிறுவனத்தின் எதிர்கால திட்டத்தில் எனது பங்களிப்பை அளித்து திறமையான ஜெட்வெர்க் குழுவுடன் இணைந்து பணியாற்றவிருப்பதை நான் ஆவலோடு எதிர்நோக்குகிறேன்," என்று கூறினார்.

திரு தசாரி தற்போது தனியார் ஈக்விட்டி நிறுவனமான அட்வென்ட் இன்டர்நேஷனலில் இயக்க பங்குதாரராக பணியாற்றி வருகிறார். அவர் 2019 முதல் 2021 வரை ராயல் என்ஃபீல்டு - ன் தலைமை நிர்வாக அதிகாரியாகவும் பணியாற்றியுள்ளார், அங்கு அவர் ஐகானிக் மோட்டார் சைக்கிள் பிராண்டின் உலகளாவிய விரிவாக்கம் மற்றும் தயாரிப்பு கண்டுபிடிப்புகளுக்கு தலைமை தாங்கியுள்ளார். ராயல் என்ஃபீல்டு - ல் பணியாற்றுவதற்கு முன்பு, திரு. தாசரி அசோக் லேலேண்டில் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் நிர்வாக இயக்குநர் உட்பட பல்வேறு தலைமைப் பதவிகளை வகித்தவர். அவரது பதவிக்காலத்தில், அசோக் லேலண்டு - ஐ குறிப்பிடத்தக்க ஒரு முன்னணி வணிக வாகன உற்பத்தி நிறுவனமாக மாற்றுவதில் இவரது பங்கு முக்கியமானது. திரு. தாசரியின் பரந்த அனுபவத்தில் கம்மின்ஸ் இந்தியா மற்றும் தி டிம்கன் கம்பெனி ஆகியவற்றில் இவர் ஏற்றிருந்த தலைமைப் பொறுப்புகளும் அடங்கும். அந்நிறுவனங்களில் அவர் உற்பத்தி நடவடிக்கைகள், மூலோபாயம் மற்றும் வணிக மேம்பாடு ஆகியவற்றில் தனது நிபுணத்துவத்தை திறம்பட பயன்படுத்தியதற்காக இவர் புகழப்படுகிறார். சஞ்சீவ் ரங்ராஸ் (முன்னாள் பிரதேச தலைமை நிர்வாக அதிகாரி, ஐ டி சி அக்ரி பிசினஸ்), பிரயங்க் ஸ்வரூப் (பார்ட்னர், ஏசிசிஈஎல்) மற்றும் ஷைலேஷ் லகானி (நிர்வாக இயக்குநர், பீக் எக்ஸ்வி பார்ட்னர்ஸ்), வைபவ் அகர்வால் (லைட்ஸ்பீட்) மற்றும் ஜெட்வெர்க் இன் இணை நிறுவனர் ஸ்ரீநாத் ராமக்ருஷ்ணன் மற்றும் அம்ரித் ஆச்சார்யா போன்ற தொழில்துறை ஜாம்பவான்களை உள்ளடக்கிய ஜெட்வெர்க் -ன் இயக்குநர்கள் குழுவை வினோத் குமார் தாசரியின் வரவு மேலும் வலுவூட்டும். ஒப்பந்த உற்பத்தித் துறையை ஜெட்வெர்க் தொடர்ந்து மேம்படுத்தி வருவதால் அவரது பரந்த அனுபவம் மற்றும் நிரூபிக்கப்பட்ட தலைமை ஒரு மதிப்புமிக்க சொத்தாக இந்நிறுவனத்திற்கு இருக்கும்.

# பிக்பாஸ் புகழ் அமீர் நடிக்கும் புதிய படம்



சென்னை, 12 ஆகஸ்ட் 2024: பிக்பாஸ் புகழ் அமீர் கதாநாயகனாக நடிக்கும் பெயரிடப்படாத படத்தின் பூஜை, மற்றும் படப்பிடிப்பு மிக விமரிசையாக நடைபெற்றது.

பி.ஜி.முத்தையாவின் உதவியாளர் மற்றும் குறும்பட இயக்குனர் பி.டி. தினேஷ் இயக்கத்தில் ஸ்டைஸ் ஃபிலிம் மேக்கர்ஸ் தயாரிப்பில் உருவாகும் ப்ரொடக்ஷன் நெ : 1 படத்தின் படப்பிடிப்பு, ஆகஸ்ட் 9 ஆம் தேதி முதல் சென்னையில் துவங்கியது.

இன்றும் சில மக்கள் எற்று கோள்ள முடியாத வாழ்வியலை மையகருவாக கொண்டு கதாநாயகனின் கதாபத்திரம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் முக்கிய கதாப்பாத்திரத்தில் ஜித்தன் ரமேஷ், இயக்குனர் பேரரசு, சிங்கம்புலி, ஜெயபிரகாஷ், சமீர் தர்ஷன், காதல் சுகுமார், பிரியதர்ஷினி, மேலும் பல நடிகர்களும் நடிக்க உள்ளனர்.

ஒளிப்பதிவு - ஆர்.ஜி.ரவீன், கலை இயக்குனர் - இன்பபிரகாஷ், படத்தொகுப்பு - எஸ்.மணிகுமரன், நடன இயக்குனர்- மானாட மயிலாட ஃபயாஸ், இசையமைப்பாளர்- சாய் பாஸ்கர், அபுபக்கர், தயாரிப்பு நிர்வாகி - ஜெ.பிரேம் ஆனந்த், தயாரிப்பு - முகமது சமீர், மக்கள் தொடர்பு - சதீஷ்குமார் (எஸ்2 மீடியா).